கன்னியாகுமரி மாவட்ட முதுநிலை ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: முனைவர் ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப.,

ந.க.ஒ1/12633/2008 நாள் 18.5.2009

பொருள்: அரசு நலத் திட்டம் - கன்னியாகுமரி மாவட்டம் - மாவட்ட ஆட்சியரின் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் சிறப்பு நடவடிக்கைகள் - வாரம் ஒரு வருவாய் கிராமம் நிகழ்ச்சி நிரல் ஐந்தாம் கட்டம் - தொடர்பாக.

படிக்கப்பட்டவை:
1) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் எண்.ஒ1/12633/2008, நாள் 25.2.2008
2) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் எண்.ஒ1/12633/2008, நாள் 12.5.2008
3) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் எண்.ஒ1/12633/2008, நாள் 1.9.2008
4) கன்னியாகுமரி மாவட்ட முதுநிலை ஆட்சியரின் செயல்முறைகள் எண்.ஒ1/12633/2008, நாள் 2.1.2009 மற்றும் 17.2.2009

--------------------

தமிழக அரசு ஏழை எளிய மக்களின் துயர் களைய வேண்டி பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகம் செய்துள்ள நிலையில் மேற்படி நலத்திட்டங்களை பற்றி நாளது வரையில் சரியாக புரிந்து கொள்ளாமலும், விழிப்புணர்வு எய்தா நிலையிலும் அதன் பலனை அனுபவிக்காமல் வறுமையில் வாடிவரும் மக்கள் இன்னமும் உள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், இது போன்ற ஏழை எளிய மக்கள் அரசின் நலத்திட்டங்களை துய்க்க அனைத்து தகுதிகளை பெற்றிருந்தும் பல்வேறு காரணங்களால் அத்தகைய பலனை நாளது வரையிலும் பெறாமலேயே உள்ளனர். இந்நிலை கண்டிப்பாக களையப்பட்டு ஏழை எளிய மக்களின் துயர் துடைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடும் பொது நலன் கருதி அரசு ஏற்படுத்தியுள்ள நலத்திட்டங்கள் அவ்வாறே எழை எளியோருக்கு தங்கு தடையின்றி சென்றடைய வேண்டும் என்ற நோக்குடனும் வாரம் ஒருமுறை மாவட்டத்திலுள்ள நான்கு வட்டங்களில் ஒரு வருவாய் கிராமத்தை சுழற்சி

முறையில் தேர்தெடுத்து அக்கிராமத்தில் ஒரு சிறப்பு முகாம் நடத்தி அந்த முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது தொடர்புடைய துறை சார் அலுவலர்களால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இதில் அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் கீழ்குறிப்பிட்ட நாட்களில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறும் சிறப்பு முகாமில் பொது மக்களிடமிருந்து அனைத்து நலத்திட்ட உதவிக் கோரி கிடைக்கப்பெறும் மனுக்கள் மீது தொடர்புடைய துறை அலுவலர்களால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு நடத்தப்படவுள்ள சிறப்பு முகாம் குறித்து அந்தந்த வட்டாட்சியர்கள் விளம்பரம் செய்திடல் வேண்டும். மேலும் அந்தந்த கிராமத்தில் உள்ளடங்கிய ஊராட்சி / சிறப்பு நிலை ஊராட்சி தலைவர்கள் மற்றும் வார்டு மெம்பர்கள் விடுபட்ட பயனாளிகளை கண்டறிந்து முகாமில் சேர்ப்பிக்க தக்கவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர்கள், தனி வட்டாட்சியர் (ச.பா.தி) மற்றும் வட்டாட்சியர்கள் இவ்வினத்தில் பிற துறை அலுவலர்களின் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மண்டல துணை வட்டாட்சியர்கள் வரும் மனுக்கள் கணினியில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் இவ்வாறான சிறப்பு முகாம் சீராக செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஐந்தாம் கட்டமாக, இம்மாவட்டத்தில் சிறப்பு முகாம் நடத்தப்படவுள்ள கிராமங்கள் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வட்டத்தின் பெயர் | | கிராமத்தின் பெயர் | சிறப்பு முகாம் நடைபெறும் இடம் | முகாம் நடத்தும் அலுவலர் | முகாம் நடைபெறும் நாள் | முகாம் நடவடிக்கை ஒருங்கிணைப் பாளர் |
|---|---|---|---|---|---|---|
| அகஸ்தீஸ்வரம் | 53-வது வாரம் | நீண்டகரை-பி | கிராம அலுவலகம் | மாவட்ட ஆட்சித் தலைவர் | 23.5.2009 | வருவாய் கோட்டாட்சித் தலைவர். |
| தேவாளை | 54-வது வாரம் | அனந்தபுரம் | ,, | ,, | 30.5.2009 | ,, |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கல்குளம் | 55-வது வாரம் | கோதநல்லூர் | ,, | ,, | 6.6.2009 | ,, |
| விளவங்கோடு | 56-வது வாரம் | விளவங்கோடு | ,, | ,, | 13.6.2009 | ,, |
| அகஸ்தீஸ்வரம் | 57-வது வாரம் | இரவிபுதூர் | ,, | ,, | 20.6.2009 | ,, |
| தோவாளை | 58-வது வாரம் | பூதப்பாண்டி | ,, | ,, | 27.6.2009 | ,, |
| கல்குளம் | 59-வது வாரம் | கடியப்பட்டிணம் | ,, | ,, | 4.7.2009 | ,, |
| விளவங்கோடு | 60-வது வாரம் | ஏழுதேசம் | ,, | ,, | 11.7.2009 | ,, |
| அகஸ்தீஸ்வரம் | 61-வது வாரம் | பறக்கை | ,, | ,, | 18.7.2009 | ,, |
| தோவாளை | 62-வது வாரம் | ஆரல்வாய் மொழி | ,, | ,, | 25.7.2009 | ,, |
| கல்குளம் | 63-வது வாரம் | திற்பரப்பு | ,, | ,, | 1.8.2009 | ,, |
| விளவங்கோடு | 64-வது வாரம் | பைங்குளம் | ,, | ,, | 8.8.2009 | ,, |
| அகஸ்தீஸ்வரம் | 65-வது வாரம் | தெங்கம்புதூர் | ,, | ,, | 22.8.2009 | ,, |
| தோவாளை | 66-வது வாரம் | அழகியபாண்டி புரம் | ,, | ,, | 29.8.2009 | ,, |
| கல்குளம் | 67-வது வாரம் | இரணியல் | ,, | ,, | 5.9.2009 | ,, |
| விளவங்கோடு | 72-வது வாரம் | பாகோடு | ,, | ,, | 12.9.2009 | ,, |
| அகஸ்தீஸ்வரம் | 73-வது வாரம் | வடிவீஸ்வரம் | ,, | ,, | 19.9.2009 | ,, |
| தோவாளை | 74-வது வாரம் | தாழக்குடி | ,, | ,, | 26.9.2009 | ,, |

முதுநிலை மாவட்ட ஆட்சியருக்காக
தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி)

| | |
|---|---|
| 31/10/2009 | Varam Oru Grammam will be conducted at Thachamalai, Pechiparrai, Kalkulam Taluk |